**C.C. No.4/2025**

**Deposition of P.W. 4**

**Dated : 19.02.2026**

**Name : S.V.Raveendran**

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

1வதுஎதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

சம்பவ இடத்தில் இருந்து சிவகாமிபுரம் பீட் 8 கிலோமீட்டர் தொலைவிலும், பணக்குடி பீட் 3 கி.மீ தொலைவிலும், ரோஸ்மியாபுரம் பீட் 5 கி.மீ தொலைவிலும் உள்ளது. எதிரிகள் நின்ற இடம் வனப்பகுதி இல்லை என்றால் சரிதான். உப்புஓடை குட்டிக்குளம் பகுதி எந்த கிராம எல்லைக்குட்பட்டது என்றால் சிவகாமிபுரம் கிராமத்திற்கு உட்பட்டது. 2வது எதிரியின் கைது விவரத்தை காவல்நிலையம் மற்றும் கிராம நிர்வாக அலுவரிடம் தகவல் சொன்னேனா என்றால் இல்லை. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய இருவரும் சம்பவ இடத்திற்கே நேரடியாக வந்தனர். நான் மற்றும் அ.சா.3 இருவரும் சேர்ந்துதான் 4.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றோம். உப்புஓடை குட்டிக்குளம் பகுதி விவசாய நிலமா அல்லது தரிசு நிலமா என்றால் ஞாபகம் இல்லை. குட்டிக்குளத்திலிருந்து சிவகாமிபுரம் காந்தி மேலத்தெரு எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் ஞாபகம் இல்லை. குட்டிக்குளத்திலிருந்து ராஜிவ்காந்தி வடக்குதெரு எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் ஞாபகம் இல்லை. சம்பவ இடத்தில் ஏதாவது உயிரினத்தை வெட்டிய ரத்தம் படிந்த மண் ஏதேனும் கைப்பற்றினேனா என்றால் இல்லை. இறந்த உயிரனத்தின் கழிவு பொருட்களை எங்கு வீசியெறிந்தார்கள் என தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. எதிரிகள் பனைஏற சென்ற பனைமரத்தோட்டம் யாருக்கு சொந்தமானது என்றால் தெரியாது. 2வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் 1வது எதிரி வேட்டையாடுவதற்கு ஆயுதங்களையோ

வேட்டை நாய்களையோ பயன்படுத்தியதாக சொல்லவி்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் அடுப்பு வைப்பதற்கு கல் வைத்திருந்தார்களா என்றால் அவர்கள் சமைப்பதற்கு முன்பே பிடித்துவிட்டோம். சமையல் பொருட்கள் அல்லது தீப்பெட்டி ஏதேனும் கைப்பற்றினேனா என்றால் இல்லை. தோலுடன் கூடிய மாமிசத்துண்டுகள் இருந்ததா என்றால் இல்லை. மொத்தம் எத்தனை மாமிச துண்டுகள் இருந்தது என்றால் எண்ணிக்கை ஞாபகம் இல்லை 1 1/2 கிலோ இருந்தது. கைப்பற்றப்பட்ட அலுமினிய சட்டியில் 15 கிலோ மாமிசத்தை சமைக்க முடியாது என்றால் சரிதான். இறந்த உயிரினத்தின் தலை தோலுடன் இருந்தது. இறந்த உயிரினம் எந்த நேரத்தில் இறந்தது என குறிப்பிட்டு எந்த ஆவணத்திலும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. கால்நடை மருத்துவரிடம் இறந்த உயிரினத்தை காண்பித்து ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ACF அலுவலர் பார்வையிட்டதால் மருத்துவரிடம் காண்பிக்கவில்லை. WLCI ன்படி நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. மரபணு பரிசோதனைக்கு அனுப்பினோமா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் 2 வது எதிரியை கைது செய்யவி்லை என்றும், 1 வது எதிரிக்கும் வழககுக்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. முறையாக விசாரணை செய்யாமல் மேலதிகாரியின் துண்டுதலின்பேரில் எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வேட்டைத்தடுப்பு காவலர் ஜெகன் என்பவருக்கும் எதிரிகளுக்கும் உள்ள முன்விரோதத்தின் காரணமாக பொய்யான தகவலின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் எந்த புகைப்படமும் எடுக்கவில்லை என்றால் சரிதான். பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.